# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்: 5** **தேதி:-19.11.2014**

# JAC கூட்ட முடிவுகள்

JAC ன் கூட்டம் 18.11.2014 அன்று புது டெல்லியில் கூடியது. கூட்டத்திற்கு JAC தலைவர் தோழர் சந்தேஸ்வர் சிங் தலைமை தாங்கினார். JAC கன்வீனர் தோழர் P.அபிமன்யு வேலை நிறுத்தம் தொடர்பாக இது வரை நடந்த தயாரிப்பு பணிகளை விளக்கி கூறினார். பின்னர் விரிவாக விவாதித்து கீழ்கண்ட முடிவுகள் ஏகமனதாக எடுக்கப்பட்டன.

1. அனைத்து மாநிலங்களிலிலும் வேலை நிறுத்த தயாரிப்பு பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. எஞ்சிய நாட்களிலும் தொடர்ந்து நமது கோரிக்கைகளை ஊழியர்களிடையே கொண்டு சென்று வேலை நிறுத்தம் 100% வெற்றி பெறுவதை உறுதிப்படுத்தவேண்டும்.
2. வேலை நிறுத்த கோரிக்கைகளை விளக்கி 20.11.2014 அன்று நாடுமுழுவதும் ஆர்ப்பாட்டம் மற்றும் கூட்டங்களை நடத்திடவேண்டும்.
3. வேலை நிறுத்தம் 26.11.2014 0000 மணி தொடங்கி 27.11.2014 0000 மணி வரை நடைபெறும். இந்த வேலை நிறுத்தம் வெளிநடப்பு வேலை நிறுத்தமாக நடைபெறும்.
4. வேலை நிறுத்த தினத்தனறு (27.11.2014) அனைத்து அலுவலகங்களிலும் பெருந்திரள் ஆர்ப்பாட்டத்தை நடத்திடவேண்டும்.
5. இந்த வேலை நிறுத்தத்திற்கு ஆதரவு அளிக்கக்கோரி அகில இந்திய, மாநில மற்றும் மாவட்ட அளவில் அதிகாரிகள் சங்கங்களிடம் வேண்டுகோள் விடுக்கப்படவேண்டும்.

***மேற்கண்ட முடிவுகளை மாவட்ட மட்டங்களில் அமலாக்கிட அனைத்து மாவட்ட செயலர்கள் மற்றும் மாநில நிர்வாகிகள் JAC சங்கங்களோடு இணைந்து முயற்சி செய்ய வேண்டும்.***

தோழமையுடன்

A.பாபு ராதாகிருஷ்ணன்
மாநிலச்செயலாளர்.